2020 மார்ச் 21]

147—

பகுதிநேர நியாய விலைக் கடை

***48974—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, பொன்னம்பலம்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், கண்ணனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டணாம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை, 978 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இதில் 270 குடும்ப அட்டைகளைப் பிரித்து, ஆதனூர் பகுதியில் முதல் பகுதிநேர நியாய விலைக்கடை செயல்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள சுமார் 701 குடும்ப அட்டைகளுடன் கட்டணாம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை தற்போது செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, பொன்னம்பலம்பட்டி மற்றும் காட்டுக்கருப்பன்கொட்டம் பகுதியிலுள்ள 164 குடும்ப அட்டைகளையும் பிரித்து, பொன்னம்பலம்பட்டி கிராமத்தில் புதிய இரண்டாவது பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் நகரில் இயங்கிவரும் R–1215 துறையூர் நகர கூட்டுறவுச் சங்க நியாய விலைக் கடை CMS 1–ல் 1,636 குடும்ப அட்டைகள் உள்ளன. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்கள், இரண்டு கிலோ மீட்டர்

தூரம் நடந்து சென்றுதான் அந்த CMS–1 கடையில் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. விநாயகர் தெருவில் 648 கார்டுகளும், மாரியம்மன் கோவில் தெருவில் 45 கார்டுகளும், சொரத்தூர் ரோட்டில் 50 கார்டுகளும், நாகம்மாள் கோவில் தெருவில் 40 கார்டுகளும், நெசவாளர் காலனியில் 30 கார்டுகளும், ஆக மொத்தம் 813 கார்டுகளை அந்த CMS–1 நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து துறையூர் விநாயகர் தெருவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய நியாய விலைக் கடையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக கட்டடமும் தயாராக உள்ளது. அதேபோன்று, என்னுடைய துறையூர் தொகுதியில் கீழே குறிப்பிட்டுள்ள கிராமப்புறங்களிலிருந்து ஏழையெளிய மக்கள் நீண்ட தூரம் சென்று, நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்கி வருகின்றனர். அங்குள்ள மக்கள் அவர்கள் குடியிருக்கும் பகுதியிலேயே பொருட்கள் பெறுவதற்கு ஏதுவாக, பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, கள்ளிக்குடி, தவிட்டுப்பட்டி, அய்யம்பாளையம், நரிக்குறவர் காலனி, தேவாங்குநகர், மேலக்குன்னுபட்டி காட்டுக்கொட்டம், கரட்டூர், பெத்துப்பட்டி, கோட்டாத்தூர் இந்திரா நகர், காந்தி நகர், கள்ளாத்துகோம்மை, நெசக்குளம், பெரும்பரப்பு, பாளையம், தோணூர், ஆலத்துடையான்பட்டி, கருப்பம்பட்டி, இ.பாதரப்பேட்டை, வெங்கட்டம்மாள் சமுத்திரம், காந்திபுரம், ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அடுத்தக் கேள்வியை பிறகு கேட்கலாம், முடியுங்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மேற்படி பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடையையோ அல்லது நகரும் நியாய விலைக் கடையையோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய

2020 மார்ச் 21]

தொகுதியில், ஏற்கெனவே மக்களினுடைய பயன்பாட்டிற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. Pachamalai LAMP Society–ல் ஒரு கடையில் 57 கார்டுகள் மட்டும் இருக்கின்றன; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அங்கு ஒரு நகரும் நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதேபோன்று, சிக்கத்தம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக அங்கே ஒரு நகரும் நியாய விலைக் கடை கேட்கிறீர்கள். அங்கு 94 குடும்ப அட்டைகளே இருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் இடங்களில், சட்டவிதிகளின்படி, சில கடைகளைப் பிரிக்க முடியவில்லை. இதுபோன்று சட்டவிதிகளின்படி பிரிக்க முடியாத நிலையிலும், மக்கள் பயன்பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதைக் கருத்தில்கொண்டுதான், பெரும்பாலான உறுப்பினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதுவரை நம்முடைய தமிழக வரலாற்றில் இல்லாத வகையில், நகரும் நியாய விலைக் கடைகளைக் கொடுத்திருக்கிறார். எந்தவொரு முதலமைச்சரும் இதுபோன்று 3,501 நகரும் நியாய விலைக் கடைகளைக் கொடுத்ததாக வரலாறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், நீங்கள் சொன்னீர்களல்லவா; குக்கிராமங்களில், சிறு சிறு கிராமங்களில் வாழ்கின்ற சாதாரண, ஏழையெளிய மக்கள், விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்பதற்காகத்தான் நகரும் நியாய விலைக் கடைகளைக் கொண்டு வருகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் மட்டும் இப்போது 17 நகரும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பொன்னம்பலம்பட்டியில் தற்போது திறக்க உள்ள கடைகூட இப்போது மூன்றாவது கடையாக இருக்கிறது. இரண்டு பகுதிநேரக் கடைகளாகப் பிரிக்கும் நேர்வில், தாய்க்கடையை மூன்று நாட்களும், இன்னொரு பகுதிநேர கடையை இரண்டு நாட்களும் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது திறக்கப்படவுள்ள இந்தக் கடை மூன்றாவது கடையாக இருப்பதனால், சனிக்கிழமை இதனைத் திறக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், புதிய கடை இரண்டு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது.

[2020 மார்ச் 21

முற்பகல் 10–10

இந்த நிலையில், அங்கிருந்து கருத்துரு பெறப்பட்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் மாதத்தில் இரண்டு நாட்கள், அதாவது, மூன்றாவது வியாழன் மற்றும் நான்காவது வியாழன் அன்று நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக அந்த ஊருக்கு பொருட்கள் supply செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்கு 17 கடைகள் கொடுத்திருக்கிறோம். இன்னும் வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் கேட்கிறார்கள். உரிய முறையில் கருத்துக்களைப் பெற்று யாருக்கு எந்தெந்த பகுதியில் தேவையிருக்கிறது என்பதை அறிந்து, அங்கெல்லாம் கடைகளைத் திறந்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, பச்சைமலை மற்றும் துறையூர் ஒன்றியத்தில் உள்ள கோம்பை, வண்ணாடு ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 34 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், 45 கி.மீ. தொலைவில் உள்ள டாப்செங்காட்டுப்பட்டி பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு, தங்களது இரு சக்கர வாகனத்திலோ அல்லது மலையின் குறுக்குப் பாதையில் நடந்து சென்றோதான், கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதோடு, இந்த ஆண்டு அந்தச் சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பயிர்க் கடனான ரூ.245 இலட்சத்தில், ரூ.160 இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 65 சதவிகிதம்தான் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று, சுய உதவிக் குழுக்கள் எந்தவிதமான target–ம் achieve செய்யவில்லை. நகைக் கடனான ரூ.100 இலட்சம் target–ல், ரூ.22 இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளான கோம்பை, வண்ணாடு ஊராட்சிகளில் உள்ள 34 கிராமங்களைச் சேர்ந்தவர்கள், அங்கிருந்து 45 கி.மீ. தூரம் மலைமீது நடந்துதான் செல்ல வேண்டியுள்ளது; அங்கே பேருந்து வசதியும் கிடையாது; இல்லையென்றால், இரு சக்கர வாகனத்தில்தான் செல்ல வேண்டும். எனவே, கோம்பை,

வண்ணாடு பகுதிகளின் மையமாக இருக்கக்கூடிய மணலோடை பகுதியில் ஒரு புதிய கூட்டுறவுக் கடன் சங்கத்தையோ அல்லது டாப்செங்காட்டுப்பட்டியில் இருக்கக்கூடிய சங்கத்தின் கிளைச் சங்கத்தையோ, இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அவர்கள் விவசாயப் பெருமக்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, இந்த மலைவாழ் விவசாய மக்கள் பயன்பெறுவதற்கு வழிவகை காணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், கேள்வியை முடியுங்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருப்பதால், துறைரீதியாக ஆய்வு செய்யப்படும். ஒரு கூட்டுறவுக் கடன் சங்கத்தைப் பிரித்து கிளைச் சங்கம் அமைக்க வேண்டுமென்றால், எவ்வளவு செலவினம் ஆகும் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலிருந்து வருமானம் வர வேண்டும். அதையெல்லாம் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அதனால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மலைவாழ் மக்களாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உரிய முறையில் எடுத்துச் செல்லப்படும். அதோடு உரிய கருத்துருவைப் பெற்று, துறைரீதியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.